[1975 ஏப்ரல் 11

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, வேறு நல்ல சமயத்தில் கேள்வியைக் கேட்டதில் பதில் சொல்லலாம்.

வருவாய் வாரியம்

*572 வினு—திரு. கா. வேழவேந்தன் திரு என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) வருவாய்த் துறை வாரியத்தைக் கலைத்துவிடும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ)&(இ) : வருவாய், வாரியத்தை நீக்குவது பற்றிய நிர்வாக சீர்திருத்த ஆணைக்குழுவின் பரிந்துரையின் மீதான மேல்நடவடிக்கையை ஒத்திவைக்க அரசு முடிவு செய்துள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, ஏற்கெனவே வருவாய் வாரியத்தை, கால தாமதங்கள் ஏற்படுவதன் காரணமாக, செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதன் காரணமாக, பல்வேறு காரணங்களுக்காக, கலைத்து விடலாம் என்ற கருத்து இருந்ததே, அது பற்றி அரசு தீவிர பரிசீலனை செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, அதைத்தான் சொன்னேன். நிர்வாக சீர்திருத்த ஆணைக் குழு 1972-ல் இந்த அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து அதற்குப் பிறகு என்ன செய்யலாம் என்பதைப் பற்றி பிறகு முடிவு எடுக்கலாமென்று ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, வருவாய்த்துறை வாரியத்தைக் கலைத்து விடுவது என்று இந்த சபையிலே அப்போது வருவாய்த்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. மதியழகன் அவர்கள் கூறினுர்கள். அதற்குப் பின்னுல் அமைச்சராக இருந்த அவரும் போய்விட்டார்கள். வருவாய்வாரியத்தை கலைப்பது என்ற இந்தக் கருத்து வலுப்படுவதற்குப் பதிலாக பலஹீனப் படுத்துகிற வகையில் ஆளுங்கட்சிப் பக்கத்தில் இருந்து பதில்கள் வந்து கொண்டிருக்கின்றன. வருவாய் வாரியமானது மிக பழைய காலத்தில் இருந்து தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிற அமைப்பு.

1975 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைப் போடுங்கள்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, இன்றையதினம் உள்ள நிலைமைக்கு ஏற்ற முறையில் மாற்றியமைக்கப்படாமல் இதன் கால கெடுவை நீட்டிக் கொண்டு போவதால், பல சிக்கல்கள் இருப்பதை அறிந்திருந்தும், ஏன் அரசு கால தாமதம் செய்யவேண்டும் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, வருவாய்த்துறை வாரியத்தைக் கலைக்க வேண்டுமென்ற நோக்கத்தால் வருவாய்த்துறை வாரியத்தைக் கலைத்து விடலாமாவென்பதைத்தான் நில சீர்திருத்த ஆணைக் குழு பரிசீலனை செய்து, இதற்கு மாற்றாக எப்படிச் செய்வது என்கிற திட்டங்களையெல்லாம் அளித்திருக்கிறது. கால தாமதம் அல்ல. கால காலமாக இருந்து வந்ததை உடனடியாகக்கலைப்பதில் பல கஷ்டங்கள் இருக்கலாம். இவைகளை ஆராய்ந்து அதற்குப் பிறகு முடிவு எடுக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த வருவாய்த் துறை வாரியம் ஒரு சூபர் செக்ரடேரியட்டாக இருக்கிறது என்ற கருத்து இருந்து கொண்டிருக்கிறது. அதிலும் நிர்வாகத்தில் வேலைகள் சுமுகமாக நடக்கவேண்டுமானால் இந்த போர்ட் ஆஃப் ரெவின்யூவை எடுத்து விடுவது சாலச் சிறந்ததாக இருக்கும். செக்ரடரிகள் தன்னிச்சையாக இங்கய இயலும். ஆகவே, இதைப் புனர் பரிசீலனை செய்வதற்கும், சட்ட திட்டங்களைத் திருத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இந்தக் கருத்துக்களையெல்லாம் நிர்வாக சீர்திருத்தச் ஆணைக்குழு அறிக்கையில் கொடுத்திருக்கிறது. அரசு அவைகளைப் பரிசீலனை செய்து கொண்டு உள்ளது. இது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த வருவாய்த் துறை வாரியத்தைக் கலைக்கிற யோசனை சம்பந்தமாக பரிசீலனையில் இருக்கிறதென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்போது சில வறட்சிப் பணிகள் வேகமாக நடப்பதற்கு, கண்மாய்களை அமைப்பது, ஏரிகளை ஆழப்படுத்துவது போன்ற வேலைகள் வேகமாக நடப்பதற்கு இந்த பேப்பர்களுக்குத் தடங்கலாக நிற்பது வருவாய்த்துறை வாரியமாக இருக்கிறது. இந்தத் தடங்கலை நீக்க இந்த வருவாய்த்துறை வாரியத்தை உடனடியாக ரத்து செய்ய முடியாவிட்டாலும் கலைப்பதற்கு முன்னால் இடைக்காலத்தில் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

[*1975 ஏப்ரல் 11*

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, வருவாய்த் துறை மூலமாக சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் பரிசீலனை செய்து தங்களுடைய கருத்துக்களை அளித்திருக்கிறார்கள். இதற்காக வறட்சி சம்பந்தமாக, தனியாக ஒரு செயலாளர் நியமிக்கப்பட்டு, அந்தச் செயலாளர் மூலமாக காரியங்கள் செய்யப்பட்டு வருகிறதே தவிர வாரியத்தின் மூலமாக அல்ல. தனிச் செயலாளர் நியமிக்கப்பட்டு அவர் தலைமையின்கீழ் வறட்சி நிவாரணப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, வருவாய்த் துறை வாரியத்தைக் கலைக்கவேண்டுமென்பது 4 ஆண்டுகளுக்கு முன்னாலேயே அரசாங்கத்தினுடைய முடிவு. இதன் சாதக பாதகங்களை ஆராய்ந்துதான் முடிவு எடுக்கப்பட்டது. இப்படி முடிவு எடுத்தபின்பும் ஏன் அமுல் நடத்தவில்லை, ஏன் இதில் கால தாமதம் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இதைப் பரிசீலனை செய்வதற்குத்தான் நிர்வாக சீர்திருத்த ஆணைக்குழுவின் இடத்தில் ஒப்படைக்கப்பட்டு, அந்தக் குழுவும் பரிவுரை அளித்திருக்கிறது. கலைத்து விட்டு மாற்றாக எப்படிச் செய்யலாம் என்பதையெல்லாம் பற்றி குழு யோசனை தெரிவித்திருக்கிறது. இதைப் பரிசீலனை செய்வதற்குக் கால தாமதம் ஏற்படும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, வருவாய்த் துறை வாரியத்தைக் கலைப்பதற்கு முன்னால் சில நிர்வாகங்கள் பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒப்படைக்கப்பட்டு பரீட்சார்த்தமாகப் பார்த்து விட்டு, பலன், பிரதிபலன் இவைகளைப் பார்த்து முடிவுக்கு வரலாமே. இப்படிப்பட்ட சீர்திருத்தங்களை அரசாங்கம் செய்யுமா? இதனால் தெளிவான முடிவு கிடைக்குமே, ஆகவே செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இப்போது கூட வாரியத்திடமிருந்து சிலவற்றை எடுத்துக் கொண்டு நேரடியாக அரசு பரிசீலனை செய்து உத்தரவு வழங்கி வருகிறது. இதற்கான செயற்குறிப்பு இருக்கிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, வாரியத்திற்கு ஆண்டு நிர்வாகச் செலவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, தனிக்கேள்வி போடவும்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, பொது மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே ஒரு தடைக்கல் போல இருக்கிறது இந்த வாரியம். பொதுவான அபிப்பிராயம் வாரியத்தினிடத்திலிருந்து ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே அமைச்சரவர்கள் பதிலைத் தெளிவாகச் சொல்லிவிட்டார். இது பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லிவிட்டார். திரும்பத் திரும்ப அதே கேள்வியைக் கேட்டால் அதே பதிலைத்தான் அவர் சொல்வார்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இப்படி கால தாமதம் ஏற்படுகிறது என்று சொல்லப் படுவதால், டெம்பரரி ரிலீஃப்பாக இத்தனை நாட்களுக்குள் பதில் வந்து விடவேண்டுமென்று சொல்லக் கூடிய வகையில் பரிவுரைகளை வாரியத்திற்கு அரசு வழங்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். இவைகளும் பரிசீலனையில் இருந்து வருகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, வருவாய்த்துறை வாரியத்தைக் கலைத்து விடவேண்டுமென்று அரசு எடுத்த முடிவிற்கு ஏற்ப நிர்வாக சீர்திருத்தக் குழு மாற்று யோசனையும் தெரிவித்திருக்கிறதே. என்னென்ன யோசனையைத் தெரிவித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, ஏற்கெனவே அந்த அறிக்கை சபையில் வைக்கப்பட்டிருக்கிறது. தனியாக இப்போது விவரம் தேவையென்று சொன்னால் இதற்காகத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

தஞ்சை மாவட்டக் கலெக்டர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்

*573 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், விபரம் என்ன ?